# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்)

**அரசினால் அல்லது ஓர் அரச முகவராண்மையினால் சொந்தமாக வைத்திருக்கப் பட்ட குறித்தசில கூட்டாட்சி ஆதனங்களைப் பதிவுசெய்வதனையும் கையுதிர்ப் பதனையும் வசதிப்படுத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால்*
*2018, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மே மாதம் 25 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **254 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இருப்பிடக்கூறு சொத்தாண்மை
## (விசேட ஏற்பாடுகள்)

*ச.வ.-ஓ. 50/2013*

**அரசினால் அல்லது ஓர் அரச முகவராண்மையினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட குறித்தசில கூட்டாட்சி ஆதனங்களைப் பதிவுசெய்வதனையும் கையுதிர்ப்பதனையும் வசதிப்படுத்துவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

***1.*** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சட்டத்தின் கால எல்லை.*

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஐந்தாண்டு காலப் பகுதியொன்றுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

*குறித்தசில கூட்டாட்சி ஆதனங்களைப் பதிவு செய்தல்.*

***3.*** (1) (அ) தேசிய வீடமைப்பு ஆணையாளரினால்;

(ஆ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால்;

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால்;

(ஈ) இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால்; அல்லது

(உ) அரசாங்கத்தின் சுனாமிப் பேரலை மீளக் குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் எந்த அரச அல்லது வேறேதேனும் முகவராண்மையினால் அரசுக்குச் சொந்தமான காணியில் கூட்டாட்சி ஆதனமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதோ அந்த அரச அல்லது வேறேதேனும் முகவராண்மையினால்,

சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றவாறானவையும், 2009 திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டவையும், அவற்றின் உடைமையானது, பின்வருவன எவ்வாறிருப்பினும் விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு என்றவகையாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளவையுமான அத்தகைய எல்லாக் கூட்டாட்சி ஆதனங்களினதும் வரைபடங்களைப் பதிவாளர் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்தல் வேண்டும்–

(i) உள்ளூரதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் கிடைக்கக்கூடியனவாக இல்லாமை;

(ii) உள்ளூரதிகாரசபையினால் வழங்கப்பட்ட இசைந்தொழுகுகைச் சான்றிதழ் கிடைக்கக்கூடியதாக இல்லாமை;

(iii) ஒவ்வொரு கூட்டாட்சி ஆதனத் துண்டுக்கும் ஒரு வரி மதிப்பீட்டிலக்கத்தை அல்லது வேறு சின்னத்தைக் கொண்டில்லாமை;

(iv) அத்தகைய கூட்டாட்சி ஆதனங்கள் உள்ளூரதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்களுக்கு இசைந்தொழுக இல்லாமை;

(v) கூட்டாட்சி ஆதனம் நிலவுகின்ற சட்டங்களுக்கிணங்க நிர்மாணிக்கப்பட்டில்லாமை; அல்லது

(vi) கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபையின் பொது முகாமையாளரினால் சான்றிதழொன்று வழங்கப்பட்டில்லாமை

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பதிவு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு கூட்டாட்சி ஆதனத்தின் சொந்தக்காரர், அக்கூட்டாட்சி ஆதனத்தில் இருப்பாட்சி கொள்ளுதலின் காப்பைச் சான்றுபடுத்துகின்ற கட்டிடத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்திலான வெளிப்படுத்துகை யொன்றைப் பதிவுசெய்யப்படும் நேரத்தில் பதிவாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட கூட்டாட்சி ஆதனமொன்று, விடயத்திற்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (உ) வரையிலான பந்திகளில் (இரண்டுமுட்பட) குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டது மற்றும் 2009, திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது அத்துடன் அத்தகைய ஆதனத்தின் உடைமையானது விற்பனை, குத்தகை, வாடகை அல்லது வாடகைக் கொள்வனவு என்றவகையாக எவரேனு மாளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது என்ற பொருள்பட தேசிய வீடமைப்பு ஆணையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் அல்லது காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் அல்லது அரசாங்கத்தின் சுனாமிப் பேரலை மீளக்குடியமர்த்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அரச காணியின்மீது அத்தகைய கூட்டாட்சி ஆதனத்தை நிர்மாணிப் பதற்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய வேறு அரச முகவராண்மை யின் தலைவர் என்போரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றித ழொன்று அதன்கண் அடங்கியுள்ள நிகழ்வுகளின் முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

பொருள்கோடல்.

**4**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய –

"தேசிய வீடமைப்பு ஆணையாளர்" என்பது, (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு ஆணையாளர் என்று பொருளாகும்;

''கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை'' அல்லது "அதிகாரசபை" என்பது, 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதன முகாமை அதிகாரசபை என்று பொருளாகும்;

"கூட்டாட்சி ஆதனம்'' என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட கூட்டாட்சி ஆதனம் என்று பொருளாகும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் கீழ் வீடமைப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை'' என்பது, 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்;

"பதிவாளர்'' என்பது, பதிவுசெய்யப்படவேண்டிய கூட்டாட்சி ஆதனம் எந்தப் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தப் பதிவு மாவட்டத்தின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ளவரும், (117 ஆம் அத்தியாயமான) ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவருமான காணிப்பதிவாளர் என்று பொருளாகும்;

"இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்" என்பது, 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்று பொருளாகும்;

“*நகர அபிவிருத்தி அதிகாரசபை*” என்பது, *1978* ஆம் ஆண்டின் *41* ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.